உ

" பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவவானினும் நனி சிறந்தனவே. "

# காரை அபிவிருத்திச் சபை

# கொழும்பு

## இருபத்தாருவது ஆண்டு அறிக்கை.

*நிகழும் சௌமிய ஆண்டு கார்த்திகை மாதம் 26-ம் திகதி ( 11-12-69 ) காலை 9-30 மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெற்ற 26-ம் ஆண்டு விழாவின் போது சங்க உறுப்பினர்களுக்குச் செயற் குழுவினர் சமர்ப்பித்த அறிக்கை.*

அன்புசால் அங்கத்தவர்களே,

1. தோற்றம்: *காரை நன் மக்களின் அபிவிருத்திக்காக 1943-ம் ஆண்டு யூலை 17-ம் திகதி வெளியூரில் வாழும் காரை வாசிகளினுல் காரை அபிவிருத்தி சபை கொழும்பில் நிறுவபபட்டது. 26 வருடங்களாக அரும் பெரும் சேவையாற்றியுள்ள இச்சபை கடந்த ஆண்டு ஆற்றிய பணி அறிக்கையினையும், வரவு செலவுக் கூற்றினையும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்ருேம்.*

### சபையின் நோக்கங்கள்:

(அ) நாட்டின் ஒற்றுமைப் பெருக்கம்

(ஆ) ஆத்மீக வளர்ச்சி

(இ) கல்வி விருத்தி

(ஈ) சமூக முன்னேற்றம்

(உ) கலை, கலாச்சார, பொருளாதார அபிவிருத்திக்காகவும் இன்னும் இவைபோன்ற வற்றுக்காகவும் உழைத்தல்.

### உறுப்பினர்:

*தங்களது பிறந்தகமாகிய காரை நகரின் முன்னேற்றத்தை அடிப்படை நோக்கிற் கொண்டு நிறுவப்பட்ட காரை அபிவிருத்திச் சபையின் அங்கத்துவம் தற்போது 119 ஆகும்.*

### ஆட்சிக்குழு:

*கடந்த ஆண்டு 16 ஆட்சிக் கூட்டங்கள் நடைபெற்றன.*

### குழாய் நீர்த் திட்டம்:

*எமது கிராமத்தை எதிர் நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகளுள் குழாய் நீர்த்திட்டமும் ஒன்ருகும். இதுசம்பந்தமாக எமது சபை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்*

கின்றது. உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசா அவர்கள் எமது கிராமத்திற்கு விஜயம் செய்தபோது இவ்விடயம் நன்கு வற்புறுத்தப்பட்டது. இத்திட்டத்தைத் தாமதமின்றி நடைமுறைப் படுத்துவதற்கு நீர்ப்பகுதி அதிபருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. திரு ஆ. தியாகராசா (அதிபர் இந்துக்கல்லூரி) இவ் விடயத்தில் பெரு முயற்சி எடுத்துள்ளார்.

## அஞ்சல் அலுவலகம்:

காரை நகரில் ஓர் அஞ்சல் நிலையத்தை நிறுவுவதற்கு மாண்புமிகு தபால் அமைச்சரால் 26-8-67 இல் அடிக்கல் நாட்டப்பட்டிருந்த போதிலும் அதன் வேலைகள் தாமதப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக, சபை மேற்கொண்ட துரித நடவடிக்கைகளால் அந்த வேலைகள் ஆரம்பமாகி விட்டனவென்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

## அரசினர் வைத்தியசாலை:

அரசினர் வைத்தியசாலை ஒன்று காரை நகரில் நிறுவப்பட வேண்டுமென்பதை அரசாங்கம் கொள்கையளவில் அங்கீகரித்துள்ளது. அது செயற்பட வேண்டுமென்பதே சபையின் பேரவா. அடுத்தாண்டிலாகுதல் அவ்வைத்தியசாலை நிறுவப்படுவதற் கேற்ற ஆக்க பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென எமது சபை தீர்மானித்துள்ளது.

தற்போதுள்ள ஆஸ்பத்திரிக்கும் பிரசவ விடுதிக்கும் ஒரு டாக்டரை ஆயினும் அமர்த்துமாறு அரசாங்கத்தை சபை கேட்டிருந்தும் அக்கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம். இவ்விடயம் சம்பந்தமாக, தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதென சபை தீர்மானித்துள்ளது.

## மின்சாரம்:

இது விடயமாக சபை துரித முயற்சிகள் பல மேற்கொண்டு வந்திருக்கின்றது. காரை நகர் கிராமசபையினதும், தனித்து திரு. ஆ. தியாகராசா, திரு. தா. வேலுப்பிள்ளை அவர்களினதும், எம் சபையினதும் முயற்சியினால் வெகு விரைவில் காரைநகருக்கு மின்சார விநியோகம் கிடைக்க விருக்கின்றது என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## சமயத்துறை:

வரலாற்றுப் பெருமை பெற்று விளங்கும், ஈழத்துச் சிதம்பரத்தின் திருப்பணிக்கு உதவும் பொருட்டு கடந்த 9-1-69ல் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நாடகம் ஒன்றினைச் சபை நடாத்தியது. அதன் மூலம் ரூபா 9000/- திரட்டியுதவியுள்ளோம் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். இத்திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெறுவதற்குச் சபை பல்வேறு வழிகளில் உதவியளித்து வந்துள்ளது. இந்நாடகத்தை சிறப்போடு நடத்த ஆர்வத்தோடு முன்னின்று உழைத்த திரு ஆ. திருநாவுக்கரசு (வர்த்தகர்) திரு. ச. க. பொன்னம்பலம் (வழக்கறிஞர்), திரு க. லோகநாதன் (கணக்காளர்), ஆ. செல்வரத்தினம் மற்றும் இப்பணிக்குப் பல்வேறு வழிகளிலும் பேருதவி புரிந்தோருக்கும், மலருக்கு விளம்பரம் தந்து உதவியோருக்கும் அந்நாடக விழாவிற்கு தலைமைதாங்கிய திரு. சு. சர்வானந்தா (வழக்கறிஞர்): திருமதி சர்வானந்தா அவர்களுக்கும் சபை நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கிறது

அண்மையில் திருப்பணிக்கு நிதிதிரட்டும் பொருட்டு திருப்பணிச்சபையின் தனாதிகாரி திரு. ந. சுப்பிரமணியம், திரு. இ. வைத்திலிங்கம், ஆகியோர் கொழும்பு வந்தபோது அவர்களுடன் சபையின் பொதுச் செயலாளர் பல இடங்களுக்கு அவர்களைக் கூட்டிச் சென்று நிதி திரட்டுவதற்கு பேருதவி புரிந்துள்ளார். இப் பேருதவி புரிந்ததற்கு, திருப்பணிச் சபையார், இச் சபையைப் பாராட்டியுள்ளனர்.

## மணற்காட்டு மாரியம்மன் கோவில்:

நீண்டகாலமாக பிணக்கில் இருந்துவரும் இவ்வாலய விவகாரத்தைச் சமாதான முறையில் தீர்த்து வைக்க வேண்டுமென ஆட்சிக்குழுவினர் கருதினர். அதற்காக எமது சபை திருவாளர் வே சிவகுரு (தலைவர்) ஆ. ச. ச. இராசரத்தினம் (உபதலைவர்) க விஜயசிங்கம், (உபதலைவர்) ஆ. திருநாவுக்கரசு, ஆ. பாலசுப்பிரமணியம், பொ வன்னியசிங்கம் ஆகியோர்கொண்ட ஓர் உபகுழுவை நியமித்துள்ளது. அக்குழுவினர் இப்பணிக்கு சம்பந்தப்பட்ட திரு ச. க. முருகேசு, திரு. பொ. நவரத்தினம், ஆகியோருடன் தொடர்பு கொண்டுள்ளனர் அவர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். இப் பிணக்குகள் சுமூகமாகத் தீர்க்கப்பட்டு, அவ்வாலயத்தில், வருடாந்த விழாக்கள், சிறப்பு விழாக்கள், பூசைகள், யாவும் வழமை போல் சிறப்பாக நடைபெற அம்பாள் திருவருள்பாலிப்பாளாக.

## களபூமி - திக்கரை முருகமூர்த்தி கோவில் திருப்பணி:

பல ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட திக்கரை முருக மூர்த்தி கோவில் திருப்பணி வேலைகள், இன்னமும் பூர்த்தியாக்கப்படாதிருப்பதை, சபை கவனத்திற்கெடுத்துளது. இத்திருப்பணி வேலைகள் விரைவில் நிறைவேற, திக்கரை முருகப்பெருமான் திருவருள் பாலிப்பாராக.

## காரை ஒளி:

இச்சபை மேன் மேலும் வளர்ச்சியடைவதற்கும் சபை ஆற்றிவரும் சேவைகளைக் காரை மக்கள் அறிந்து கொள்வதற்கும் அவர்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெறுவதற்கும், சபைக்கெனப் பிரசாரக் கருவியொன்று தேவையென, சென்றாண்டுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இவ்வாண்டு வெற்றிகரமாக அமுல் நடத்தப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

காரை ஒளியின் முதல் வெளியீடு புத்தாண்டு அன்று வெளியிடப்பட்டது. முதல் வெளியீட்டிற்குக் கிடைத்த அமோக ஆதரவினால், இரண்டாவது வெளியீடு நவராத்திரிச் சிறப்பிதழாக வெளியிடப்பட்டது நவராத்திரிச் சிறப்பிதழை ஈழம் வாழ் தமிழ் மக்கள் பலர் பாராட்டுமளவுக்குச் சிறந்த இதழாக அது வெளிவந்துள்ளது இவ்வெளியீடுகளுக்கு ஊக்கமும் உற்சாகமூட்டிய, திரு ஆ தியாகராசா, திரு. மா. வைத்தியநாதன், சா. குணநாயகம், க வே. துரைராசா ஜே. பி., க. வைத்தீஸ்வரக் குருக்கள், ம சிறீகாந்தா, இ நாகலிங்கம், அ. கனகசபை ஜே. பி., ச. பொன்னம்பலம், ஆகியோருக்கும் சபையின் ஆழ்ந்த நன்றி உரித்தாகுக.

அடுத்த இதழ் பொங்கல் மலராக மலரப்போகிறது என்பதைப் பூரிப்புடன் அறியத் தருகின்றோம் காரை ஒளி இவ்வாண்டு காரை இல்லங்களில் இடம் பெற வேண்டுமென்பது சபையின் வேணவா. இப்பணியை இன்று நிறைவேற்ற வேண்டிய பெரும் பொறுப்பு உங்கள் எல்லோரையும் சார்ந்ததாகும்.

## கட்டுரைப் போட்டி:

காரை மாணவர்களின் அறிவு வளர்ச்சியையும் எழுத்தாற்றலையும் கருத்திற் கொண்டு கட்டுரைப் போட்டி யொன்றினை இவ்வாண்டில் நடத்தியிருக்கின்றோம். இப் போட்டியில் பங்கு பற்றிய மாணவர்கள் திறமையை மெச்சத்தக்களவு காட்டியுள்ளனர். இக்கட்டுரைப் போட்டிக்கு நடுவர்களாக இருந்த திரு கே. இலட்சுமணன் அவர்கட்கும், சபைத் தலைவர் திரு வே சிவகுரு அவர்கட்கும், திரு ஓ. முருகையன அவர்கட்கும் சபை நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

இப் போட்டியில் காரை நகர் மாணவர் எல்லோரும் பங்கு பற்ற வேண்டுமென சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனினும் இந்துக்கல்லூரியும், யாழ்றன்

கல்லூரியும், தங்கோடை அ. மி. பாடசாலை ஆகிய பாடசாலைகள் மட்டும் பங்குபற்றி [இனி மேல் வரும் போட்டிகளில் எல்லோரும் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கின்றோம்.

## காரை நகரின் பெருமையைப் பாதுகாத்தது:

காரை நகரில் வானொலிப் பெட்டிகள் இல்லையென்றும் பின் தங்கிய கிராமம் என்றும் ''ஒப்சேவர்'' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைக்கு, சபை பலத்த ஆட்சேபம் தெரிவித்ததோடு, அச்செய்தி உண்மையற்றது என்பதையும் நிரூபித்து, காரை நகரின் பெருமையைப் பாதுகாத்து, சபையின் ஆட்சேபம் அதே ஒப்சேவர் பத்திரிகையில் ( ) வெளியாகியது.

## தமிழ் மக்களின் நலன்கருதிச் சில:

''கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் தற்போது ஓடும் புகை வண்டிச் சேவை திருப்தியில்லாதிருப்பதாகவும் பிரயாணிகள் பெரும் கஷ்டப்படுவதனாலும் கொழும்பில் இருந்து இரவு 10 மணிக்குப் புறப்பட்டு அதிகாலை 5 மணிக்குக் காங்கேசன் துறைக்கு செல்லக்கூடியதாக மேலும் ஒரு கடுகதிப் புகையிரதம் ஓடவிடும்படி, புகையிரத அதிபருக்குச் சபையினர் ஒரு வேண்டுகோள் விட்டனர்.

இந்த முயற்சிக்குத் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், செனட்டர் த. நீதிராசா, ஆகியோரும் வட பிரதேச பிரயாணிகள் சங்கமும் பெரும் ஆதரவு தந்திருப்பதோடு கூட்டு முயற்சியான பல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஆர்வத்துடன் உதவியுள்ளனர்.

## விளையாட்டுப் போட்டி:

அகில காரை விளையாட்டுப் போட்டிகளை நடத்தி, மாணவர்களுக்கு, பரிசில்களை வழங்கி, ஊக்கமும், உற்சாகமும் ஊட்டிவந்த இச் சபை கடந்த பல வருடங்களாக இப் பணியைத் தொடர்ந்து செய்ய முடியவில்லை. எனினும், காரைநகர் கனிஷ்ட பாடசாலைகளிடையே. இவ்வாண்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிக்குச் சபை வெற்றிக் கேடயம் ஒன்றைக் கொடுத்து அவர்களுக்கு ஊக்கமளித்தது. அவ் வெற்றிக் கேடயத்தை சடையாளிப் பாடசாலை சுவீகரித்துக் கொண்டது. அவ்விளையாட்டுப் போட்டியை நடத்திய குழுவினர் சபையின் இவ்வுதவியைப் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

## அனுதாபம்:

எமது சபையின் நிர்வாக அங்கத்தவரும், உணவுத் திணைக்களப் பிரதம சிறுப்பருமாகிய சைவப் பெருமகன் திரு இ. ஆ. கந்தையா, காரை நகரில் அப்போதிகரியாக பணியாற்றி சகல மக்களின் நன்மதிப்புக்கும் பாத்திரமாகிய திரு. மு. மகேந்திரன் (பொன்னையா), முன்னாள் கிராமச்சங்கத் தலைவரும், சமூகசேவையாளருமாகிய திரு மு வேலுப்பிள்ளை, தர்மசீலரும் மகாலட்சுமி உரிமையாளருமாகிய திரு எஸ். எம். கனகரத்தினம் ஆகியோர் மறைவையிட்டு (சிவபதமடைந்ததற்கு) அவர்களது குடும்பத்திற்கு சபை ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறது.

திரு மு மகேந்திரன் சேவையைப் பாராட்டி அன்னாரின் ஞாபகமாக நம் கிராமசபை ஓர் பிரதான வீதியை''மகேந்திரம் வீதி''யென நாமம் சூட்டியுள்ளார்கள். இதையிட்டு நம் கிராமசபையினரை நாம் வாழ்த்துகின்றோம்.

## நன்றி:

இலங்கையில் இப்போ வெளிவரும் ஆங்கில, தமிழ் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் இன்று இவ் விழாவை நடாத்த இம் மண்டபத்தை தந்துதவிய திரு K. C. தங்கராசாவுக்கும் மற்றும் சபைக்குச் சேவை புரிந்த ஒவ்வொருவருக்கும் எம் நன்றி எம்கௌரவ பரிசோதகர்களான திருவாளர்கள்: வே. தர்மலிங்கத்திற்கும், வேலாயுதபிள்ளைக்கும் எம் சபை நன்றியைத் தெரிவின்றக்து ஈற்றில் எம் கிராமசபைத் தலைவர் கே. விசுவலிங்கம் அவர்கட்கும், எமது சபை அங்கத்தவர்கள். அனைவருக்கும், எம பாராளுமன்ற உறுப்பினர், அவர்கட்கும் உங்கள் அனைவருக்கும், எம் நன்றி.

இங்ஙனம்,
ஆட்சிக்குழு.